மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 3—5—1990 காலை 9,00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 20-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. சென்னை, இந்திய பிராணிகள் நல வாரியத்திற்கு சொந்தமான எம். எஸ். எம். 4369-ஆம் எண் கொண்ட நட மாடும் பிராணிகள் சிகிச்சை வண்டிக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ-1) துறையின் 6-1-1990-ஆம் நாளிட்ட 40-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

85. சென்னை ராயபுரத்திலுள்ள ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனைக்குச் சொந்தமான மஹிந்திரா ஜீப்பிற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ.அ) துறையின் 10—1—1990-ஆம் நாளிட்ட 62-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

153. பாசனம் மற்றும் கட்டிடங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

154. கோரிக்கை எண். 39 மற்றும் 54—தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ்).

155. கோரிக்கை எண். 39 மற்றும் 54—தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (ஆங்கிலம்)

156. கட்டிடப் பிரிவுப் பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

157. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் சாதனை, 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

158. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் குறித்த சாதனைத் திட்டம், 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

இணைப்புகள்.

(52-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாட்டில் சாலை-மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆய்வும், 1990-91 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும்.

முன்னுரை :

1. ஒரு நாட்டில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முன்னேற்றமடையச் செய்யும் திறமையான வழிகளில் சாலைகளை சரிவர அமைத்து அவற்றை மேம்பாடு செய்வதும் ஒன்றாகும். அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு சாலைகளும் சாலைப் போக்குவரத்தும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக விளங்குகின்றன. ஒரு நாட்டில் சாலை அமைப்பும், அதன் பொருளாதார வளர்ச்சியும் நெருங்கிய தொடர்பு உள்ளவை.

நமது நாட்டில் சுமார் 80 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். அக்கிராமங்களுக்கு சாலைகள்தான் போக்குவரத்துக்கு முக்கிய சாதனமாக விளங்குகின்றன. பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பகுதிகளுக்கு மேலும் இந் நிலைமை சிறப்பாகப் பொருந்தும்.

அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்வரும் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை